1393.

கல்லூரிக் கல்வித் துறை

**அனுப்புநர்**
செ.கார்மேகம், இ.ஆ.ப.,
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
577, அண்ணா சாலை,
சைதாப்பேட்டை, சென்னை 600 015.

**பெறுநர்**
சார்ந்த கல்லூரி கல்வி இணை
இயக்குநர்கள் / முதல்வர்கள்
(இணைப்பில் உள்ளவாறு)

ந.க.எண்.2670/பி1/2024 நாள்.02 .02.2024

அய்யா/அம்மையீர்,

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சி – பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் – இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி – 60 வது அணி – 13.02.2024 முதல் 01.04.2024 முடிய நடைமுறைப்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை : பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலைய முதல்வரின் கடித ந.க. எண். அ3/266/2024, நாள்:.23.01.2024.

*****

பார்வையில் காணும் கடிதம் மற்றும் இணைப்புகளின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றன.

1. இணைப்பில் குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் ஈரோடு, பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் 13.02.2024 முதல் 01.04.2024 முடிய நடைபெறவுள்ள 41 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி 60 வது அணியில் அடிப்படைப் பயிற்சியினை பெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
2. பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி செயல்படுமாறும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் 12.02.2024 அன்று காலை 09.00 மணிக்குள் மேற்காண் பயிற்சி நிலையத்திற்கு சென்று சேரும் வகையில் அவர்களை 09.02.2024(வெள்ளிக்கிழமை) பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

...2